தென்மொழி

T. 5848

பின்விளைவை எதிர்கொள்ளத் திறமி லீரே!

கனல்கின்ற தீப்பிழம்பைக் கன்னெய்யால்
அணைத்துவிடக் கருது கின்ற
மனத்திரிபு கொண்டவர்கள் தெளிவுறுக!
இனியதமிழ் உணர்வி னோடும்
இனநலமும் தாய்நாட்டின் உரிமைகளும்
வேட்கின்ற ஏற்றம் மிக்கார்
சினமுற்றுச் சிலிர்த்தெழுந்தார் பின்விளைவு
இன்னதெனப் பேசப் போமோ?

வேர்க்கின்ற நெஞ்சத்துத் தமிழ் மறவர்
ஆங்காங்கே வினைமேற் கொண்டு
பார்க்கின்ற திசையெல்லாம் பத்துநூ
றாயிரமாய்ப் பல்கு கின்றார்
ஆர்க்கின்ற முழக்கத்தை ஆணவத்தால்
செவிகொள்ள மறுத்தா லும்நீர்
சேர்க்கின்ற தீவினையின் பின்விளைவை
எதிர்கொள்ளத் திறமி லீரே!

—இறை.

சே.எண்: 26045

சுவடி : 27
ஓலை : 1

விலை:
3-00

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால் எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவளம் தி.பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் முழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமுழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829]

[சுவடி: 27 தி.பி. உ0உச — இரட்டை (சூன்-சூலை 93) (ஓலை: 1]

கோயில் பாதுகாப்பும் கொள்ளை கொடுப்பினைகளும்!

தமிழக முதலமைச்சர் செயலலிதா,வின் பத்தி முற்றி, ஆட்சித் திறம் அதிகரித்து மேலும் மேலும் விரிவடைந்து கொண்டே போகின்றது. அண்மையில் அவர் புதுக் கரடி ஒன்று விட்டிருக்கிறார்.

செயலலிதாவின் பத்திப் பெருக்கு நாடறிந்த ஒன்று. முன்பு குடந்தைத் திருக்குளத்தில் எல்லாருக்கும் காட்சியளித்து நல்லோரையில் நீராடிய நிகழ்ச்சி நூற்றுக்கணக்கானோர் தம் இன்னுயிரினும் மேலானது. பின்பு, மக்கள் குடிநீருங்கிட்டாமல் இடிப்பட்டு இடர்ப்பட்டுக் கொண்டிருக்கும்போது மயிலைத் திருக்குளத்தில் தெப்பம் விட்டே தீர வேண்டும் என்னும் முனைப்பில் சரக்குந்துகளில் தண்ணீரைக் கொணர்ந்து குளத்தை நிரப்புதற்கு மேற்கொண்ட முயற்சி இலேசுப்பட்டதா? இளஞ் சிறுவர்களையும் ஈர்த்து ஆழ்த்திய அந் நிகழ்ச்சியை யார்தான் மறக்கமுடியும்!

இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கே நினைவுகூர வேண்டியுள்ளது. அண்மையில் திருவரங்கத்தில் கருவறை நுழைவு என்னும் அறப்போராட்டத்தினை, மேற்கொண்டு, வெளிப்படையாக அறிவித்துவிட்டு, யாருக்கும் இடையூறு செய்யாமல் எந்தப் பொருளுக்கும் சேதாரம் விளைவிக்காமல், கோவிலுக்குள் தெரிய வழியில் சென்று தங்கள் கோரிக்கைகளை முழங்கிய அறப்போராளிகள், கோயிற் கதவு அடைக்கப்பட்டுக் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்று சட்டத்தின் வலுவான பாதுகாப்போடு, பிறப்பின் அடிப்படையிலான சாதி நிலைகொண்டுள்ள இடம் கருவறையும் மடவளாகங்களுமேயாகும். உண்மையில் சீர்திருத்த நோக்கங் கொண்டார் எவரும் செயலாற்ற வேண்டிய களம் அவை இரண்டுமே.

கோயில் குருக்கள் தொழில் சாதியின் பெயரால்—பிறப்பின் அடிப்படையில் அல்லாது தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இது பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் சீரிய நோக்கங்களில் ஒன்று. தி.மு.கழகத்தின் முந்தைய ஆட்சிக் காலத்தில் இதற்கு வழிவகுக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட சட்டம் மீயுயர் மன்றத்தால் முடக்கப்பட்டுவிட்ட நிலையில் அதனைச் செயற்படுத்த விழைபவர்கள் அறப்போரில் ஈடுபடுவதையும் அரசியலாக்குவதையுந் தவிர வேறு வழியில்லை. அதில் முனைந்து ஈடுபடும் வாய்ப்புப் பெற்றிருப்பவர்கள் வாளா இருக்கின்றமையால் மக்கள் கலை இலக்கியக் கழக இளைஞர்கள் அப் போராட்டத்தைத் தாம் கையில் எடுத்துள்ளனர்.

அப்படி அறப்போரில் ஈடுபட்ட இளைஞர்களை, திராவிட இயக்கத்தின் படிநிலை (பரிணாம) வளர்ச்சி என்று தம்மை வரணித்துக் கொண்ட செயலலிதாவின் அரசு மிகக் கொடுமையாகத் தாக்கியுள்ளது. அது மட்டுமா? அங்கு நிகழ்ந்த குழப்படிகளில் கால் இடறிச் சாய்ந்து முட்டி மோதிக் கொண்ட 'அவாளுக்'கெல்லாம் தலைக்கு 5000 உருவா மேனி இழப்பீடு வழங்கித் தம் பரிவுணர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார் செயலலிதா!

செயலலிதா ஆட்சியின் அவலநிலை பற்றி யறிய இதோ மற்றொரு எடுத்துக் காட்டு: நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த சேந்தமங்கலம், நயினார்மலை என்னும் ஊர்களிலுள்ள பெருமாள் கோயில்களின் அறங்காவலராகச் சந்திரசேகரன் என்பவர் செயலலிதா அரசால் அமர்த்தப்பெற்றார். ஆனால் அவர் அப்பதவிக்குத் தகுதியற்றவர் என்றும், அவர் பெயர் காவல்நிலையக் குற்றவாளிப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது என்றும் குறிப்பிட்டு, அவ்வமர்த்தம் செல்லாது என்று அறிவிக்கவேண்டும் என்றும்,

அவ்விடத்தில் தம்மை அமர்த்த வேண்டும் என்றும் கோரி-நடேசன் என்பவர் உயர்அற மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

நடேசனின் வழக்கை உசாவலுக்கு ஏற்ற உயர்அற மன்ற நடுவர் சந்திரசேகரன் அமர்த்தத்திற்குத் தடையுத்தரவு பிறப்-பித்தார். அவ்வுயர்அற மன்றத்திலேயே சந்திரசேகரனும் ஒரு வழக்குத் தொடர்ந்தார். நடேசன் பெயரும் அக் காவல் நிலையக் குற்றவாளிப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது என்று குறிப்-பிட்டு அவரையும் அறங்காவலராக அமர்த்தாது தடைப்படுத்-தக் கோரினார்.

உயர்அற மன்ற நடுவரோ வழக்கை உசாவி இவரும் அறங்-காவலர் பதவிக்கு அருகதையற்றவர்கள் என்பதைக் குறிப்பிட்டு மேற்கூறிய இருவருமே குழுகாயக் குற்றவாளிகள் என்பதைச் சுட்டிக்காட்டிச் சந்திரசேகரன் அமர்த்தம் பற்றி அரசுக்குக் கண்டனமும் தெரிவித்து அறிவுரையும் வழங்கியுள்ளார்.

இந்த அழகில்தான் பழனியில் உள்ளாட்சிமுறை அமைப்பை ஒழித்துவிட்டு நகராட்சிப் பொறுப்பை அங்குள்ள கோயில் வசமே ஒப்படைக்கும் திட்டம் ஒன்றை அண்மையில் செயலலிதா அறிவித்திருக்கிறார். தம் ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதேயில்லை என்ற முடிவுக்கு அவர் வந்து-விட்டாரோ? நகராட்சி ஆளுமை ஆணையாளர் பொறுப்பில் இருந்தால் என்ன கோயிலார் பொறுப்பில் இருந்தால் என்ன என்று கருதுகிறார் போலும்!

எப்படியோ, இப்பொழுதுள்ள சிக்கல்களிலிருந்து மக்கள் கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியாகவோ, ஆழம்பார்க்கும் வேலையாகவோ இவ்வறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு பக்கம் கோயிற் கொள்ளைகள் அடுத்தடுத்துத் தொடர்ந்து கொண்டிருக்க, இன்னொரு பக்கம் நலிவுற்ற கோயில்களுக்கு நல்கையாகப் பெருந்தொகைகளை வாரி வழங்கிக்-கொண்டிருக்கிறார் செயலலிதா. இரண்டும் தொடர்கின்றன.

'பாடல் பெற்ற கோயில்கள்' என்று குறிப்பிடப் பட்டிருப்பதற்கேற்ப நாயன்மார்களும் ஆழ்வார்களும் நறுந்தமிழில் நாளும் பாடிப் பரவிய அத் திருக்கோயில்-களில் வடமொழி வல்லாண்மையை ஒழித்து விட்டுத் தமிழ் வழிபாடு நடைபெற செயலலிதா ஆவன செய்வாரா? அக்கறை காட்டுவாரா? நூறு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடத்துவதைவிடத் திருக்கோயில்களில் தீந்தமிழை வழிபாட்டு மொழியாக நடைமுறைப்படுத்துவது மேலானது.

—இறை.

சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கப் புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'!

பாவலர் **தமிழுக்குமரன்.**

தடாநாயகி செயலலிதாவே! உடனே
தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலைசெய்!
அடாது செய்தால் படாது படுவாய்!
அழிவுக் காலம் நெருங்கி விட்டது!
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

ஏன்எதற் காக இணையில் லாத
எங்கள் அறிஞரைச் சிறையில் அடைத்தாய்?
கூன் நிமிர்ந் தெழுந்தோம் கொள்கைப்புலிகளாய் உன்
கொடுமைகளுக்கோர் முடிவு கட்டிச்
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

என்ன குற்றம் செய்தார் கூறு
எங்கள் பாவல ரேறு அய்யா?
உன்னுடைய ஆட்சியைக் கவிழ்க்க
ஓர்படை திரட்டிப் போர்க்களம் அமைத்தாரா?
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

கொள்ளையடிப்பவன் கொலைபல செய்தவன்
கள்ளக் கடத்தல்காரனை விட்டுத்
தெள்ளு தமிழைச்சிறையில் அடைத்தவுன்
திமிரையடக்கிடத் திரண்டெழுந்து
சிறைப்பட்ட எங்கள் தமிழைமீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி
பொங்குகடலாய்ப் புயலாய் இன்று!

யாரையார் சிறையில் அடைப்பது? இதனை
ஏனென்று கேட்க எழுந்தோம் யாம்! தமிழ்ச்
சீரை உணராச் செயலலிதா! உன்
செருக்கை யடக்கிடத் திரண் டெழுந்தோம்!
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்குகடலாய்ப் புயலாய் இன்று!

பெரியார் அண்ணாபெயரைச் சொல்லிப்
பித்த லாட்டம் செய்யும் கள்ளி!
நரியைவஞ்ச கத்தில் விஞ்சும்
நடிகை உனது முகத்திரை கிழித்துச்
சிறைப்பட்ட எங்கள் தமிழைமீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

ஆட்சி நமதெனும் ஆண வத்தில்
ஆடுகின்றாய் பேயாட்டம் இன்று;
மாட்சியில் லாதவுன் மமதைக்குச் சாவு
மணிய டிக்கவந்தோம் என்று
சிறைப்பட்ட எங்கள் தமிழைமீட்கச்
சீறும் புலியாய் அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்குகடலாய்ப் புயலாய் இன்று;

அதிகா ரம்நம் கையில் என்று நீ
ஆடாத ஆட்டம்ஆடுகின் றாயா?
எத்தனை நாள்நீ ஆட்டம் காட்டுவாய்?
தமிழ்இளை ஞர்கள் கொதித்தெழுந்தார்கள்
சிறைப்பட்ட எங்கள் தமிழைமீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

பொய் வழக்குப் போடாதே என்று
பொங்கி யெழுந்தார் மக்கள் இன்று!
மெய்யுணர்வு சிலிர்த்தெ ழுந்து
மேனா மினுக்கி உன்னை விரட்டிச்
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்

சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறுய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

காவல்துறையை ஏவி விட்டுக்
கடுஞ்சிறை யகத்தெமைக் கொடுமை செய்கிறாய்!
சாவதற்கும்யாம் அஞ்சவில்லை!
தமிழ்நாட்டை மீட்காமல் துஞ்சோம் என்று
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறுய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று
வீங்குதோள் காளையர் வீறுகொண்டெழுந்தார்
விடுவிப் போம்தமிழ் நாட்டை இன்றே!
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறுய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

பொழிலன் தலைமையில் பொங்கி யெழுந்து
புதுவரலாறு படைத்து வெற்றிச்
சூழிபோட்டதுகாண் சூளுரைத்துத்
தோளுரங் காட்டிச் சுவடுபதித்துச்
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறுய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

பாம்பையும் ஓர்பார்ப் பானையும் கண்டால்
பாம்பைவிடக் கொடிய பார்ப்பானை அடியென்றார்!
ஆம் ஆம் நீயும் அந்தச் சாதி!
அடிக்காது விட்டதால் ஆடித் தீர்க்கிறாய்!
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறுய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று! ○

([illegible])

‘அவர்’ யார்?

—புலவர். கடுங்கோ.

ஆரியப் பார்ப்பனர்களின் ஆச்சாரிய சுவாமிகளாகவும், பரமாச்சாரியாளாகவும், பெரியவாளாகவும் இருந்து மகா சுவாமிகளாகியிருக்கும் காஞ்சி சங்கராச்சாரியார் சந்திரசேகரரின் நூற்றாண்டு விழா பொன் முழுக்கு(கனகாபிஷேக)விழா நிகழ்ச்சிகள் மிகவும் தடபுடலாக நடைபெற்றுத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் குடியரசுத்தலைவர், தலைமையமைச்சர் தலைமைத் தேர்தல் அதிகாரி, தமிழக ஆளுநர், இராசத்தான், ஆளுநர் என்று ஆட்சிப் பொறுப்பிலுள்ள பெரும் புள்ளிகளெல்லாம் தாம் தாங்கியுள்ள பதவிப் பொறுப்பைப் பற்றிக் கவலைப்படாது, மானமோ நாணமோ சிறிதுமின்றி வரிசையாக வந்து வணங்கி வாழ்த்துப் பெற்றுச் செல்கின்றனர். நம் முன்னாள் குடியரசுத் தலைவர் அம் மடத் தொண்டர்களில் தலையாயவர் என்பது வெளிப்படை.

தலைமையமைச்சர் நரசிம்மர் சங்கராச்சாரியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி வடமொழி வேதக் கல்வி வளர்ச்சிக்காகப் பொதுமக்கள் பணத்திலிருந்து எடுத்து ஐந்து கோடி உருவா காணிக்கையாகச் செலுத்தியுள்ளார். இதுதான் மதம் சார்பற்ற நாட்டின் ஆட்சிமுறை மாண்பு போலும்!

காஞ்சி சங்கராச்சாரியார் சந்திரசேகரர் எத்தகையவர்?

தமிழ்ப் பெருமக்கட்கு உயிரினுஞ் சிறந்த செயிரறு செந்தமிழ், சங்கராச்சாரியாரைப் பொறுத்தவரை ‘‘நீச பாஷை’’. ஆகவே மற்ற நேரங்களில் தமிழில் பேசினாலும் ‘பூஜா வேளையில் தமிழில் பேசுவதில்லை; ‘தேவபாஷை’ எனப்படும் சமற்கிருதத்தில் தான் பேசுவது வழக்கம். கேட்பவர் அப் ‘பாஷை’ தெரியாதவராயிருப்பின் இடையில் பெயர்ப்பாளர் ஒருவர் இடம் பெறுவார். ஆட்சி மொழிக் காவலர் இராமலிங்கனார்க்கே சங்கர மடத்தில் இத்தகைய நிலைதான் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்று. உலகப் பொதுமறையென்று போற்றப்படும் உயரிய தமிழ் நூலான அருமை திருக்குறள் நோன்பிகளால் தீண்டப்படக்கூடாத ஒன்று என்பது சங்கராச்சாரியாரின் முடிபு. ‘தீக்குறளை சென்றோதோம்’ என்னும் திருப்பாவைத் தொடருக்குத் ‘தீயதாகிய திருக்குறள் நூலைப் பயிலமாட்டோம்’ என்று பொருள் கூறியவர் அவர்.

‘குறளை’ என்பது புறங்கூறுதல் என்னும் பொருளது என்பதைப் ‘பெரியவாள்’ அறியாதவரல்லர். ஆயினும் அவர் அவ்வாறு கூறியது நெஞ்சார்ந்த பொய்யே; தமிழ்மறைபால் அவர் கொண்ட வெறுப்புணர்வின் வெளிப்பாடே.

இவற்றை நாம் இங்குச் சுட்டிக் காட்டுவது தமிழ்மக்கள் சங்கராச்சாரியாரை நன்கு அடையாளங் கண்டுகொள்ள

வேண்டும் என்பதற்காகவே. பெரிய சங்கராச்சாரியார் மிகவும் நல்லவர்; எல்லாவற்றையுங் கடந்தவர்; மற்றவர்களை விட்டுத் தள்ளுங்கள்; பெரியவர் மதிக்கத்தக்கவர்; வழிபாட்டுக்குரியவர் என்று தமிழுணர்வாளர்களே பலர் கருதுவது எத்துணை பிழை-யானது என்பதை உணர வேண்டும்.

பிராமணர்களிலே கூடச் சிலர் பழைமையையும் பகைமை-யையும் மறந்து அறிவியல் வளர்ச்சியையும் காலப் போக்கையும் ஒட்டி மனந்திருந்தித் தமிழ் மக்களோடு இணக்கமாக வாழ எண்-ணினாலும், அவர்களை 'வைதிகம்', 'வர்ணாசிரம தர்மம்' என்ப-வற்றால் ஈர்த்து அப் பிராமணச் செருக்கிலேயே நிலைப்படுத்தி வைத்திருக்கும் பெருமை(!)காஞ்சி சங்கர மடத்திற்கு உண்டு.

சிவனியத்திற்கும் மாலியத்திற்கும் கோயில் வழிபாட்டிற்குங் கூட அப்பாற்பட்டது அவர்தம் மதம். இருந்தபோதும் இந்து மதம் என்னும் மாயக் கயிற்றால் தம்மை எல்லாவற்றிலும் தொடர்புபடுத்திக்கொண்டு அவற்றையும் தம் போக்கில் இயக்கி வருகிறார்; உண்மையில் அவற்றுக்கு உரிமை பூண்டவர்களுங் கூட ஒரங்கட்டப்பட்டு விட்டார்கள் என்றால் பாருங்களேன்!

அன்டர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

பாவலரேறு அவர்கள் 'தடா' சட்டத்தின்கீழ் சிறை வைக்கப்பட்டுள்ளதும் தடா சட்டத்தின் கொடிய தன்மையும் அன்பர்கள் அறிந்தவையே. இதனால் அவர்தம் அளப்பரிய மொழி, இன, நாட்டுப் பணிகள் தடைப்பட்டு நிற்கின்றன.

ஐயா அவர்களைப் பிணையலில் விடவும் மறுத்துள்ளனர். மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அவரை விடுவிக்குமாறு அரசை வற்புறுத்திச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கண்டன அறிக்கைகள் விடப்பட்டன.

அவ்வகையில் கழக அன்பர்களும் ஆர்வலர்களும் கீழே குறிப்பிடப்படுவது போல ஒரு வேண்டுகையை அஞ்சலட்டை வழியும் தொலைவரி வழியும் தமிழக முதலமைச்சருக்கு அனுப்பு-மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பொதுமக்களும் இவ்வாறு அனுப்ப அன்பர்கள் ஆவன செய்யலாம்.

அஞ்சலட்டையில்:

தமிழக அரசே!
தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களின்
தமிழ்ப் பணியைத் தடுக்காதே! உடனே
அவரை விடுதலை செய்!

தமிழுணர்வுள்ளோர் தமிழைக் காக்க!

தமிழினம் இன்றைய நிலையில் பலவழியிலும் திசை திரும்பிப் போய்க் கொண்டுள்ளது. தனக்கென அமைந்த ஓர் அறிவியல், சார்ந்த நெறி முதற்கொண்டு அதன் வாழ்வியல், பண்பியல், குமுகவியல், மொழியியல் ஆகிய அனைத்திலும் அது தன் மரபு நிலைகளையும் நாகரிகச் சீர்மைகளையும் கட்டவிழ்த்துக் கொண்டு தடம் புரண்டு தடுமாறிக் கொண்டுள்ளது. தனக்கெனத் தன் முன்னோர் அமைத்துக் கொடுத்த அனைத்துச் செந்நெறி-களையும் அது கைநெகிழ்த்துக் கொண்டுள்ளது. இந்நிலை எங்கே கொண்டு செல்லுமோ இவ்வினத்தை தெரியவில்லை. இன்னும் ஓர் ஐம்பது, நூறாண்டுகளுக்குள் தமிழியல் சார்ந்த ஒரு பழம் பெரும் இனமே இல்லாது போய்விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. காலங் காலமாய் ஓவ்வின மக்கள் உலகியலி-லும் உளவியலிலும் ஆழ்ந்து தோய்ந்து படிநிலையுற்று அதன் பட்டறிவால் வாழ்வியல் கூறுகளும் மனவியல் தோற்றங்களும் மக்களியல் தெளிவுகளும் எங்கு ஒன்றுக்கும் உதவாமல் போய்-விடுமோ என்று மிகவும் வருந்தவேண்டியுள்ளது. மக்கள் வாழ்க்கையின் அடித்தளத்தில் பூத்து மலர்ந்து மணம் பரப்பிய மனமலரின் மெய்யுணர்வுத் தேன், எங்குப் பொருளற்ற ஒரு வெற்றுணர்வாக வெறுந் தரையில் சிந்தப்பட்டு விடுமோ என்று நெஞ்சம் நெகிழ வேண்டியுள்ளது. இவ்வத்தனைக்கும் மேலாக, ஊழி ஊழியாய் மெய்ம்மையும் உள்ளுணர்வும் சான்ற தெய்வப் புலமைச் செந்நெறிச் சான்றோர் தம் உள்ளத்தால் பொதிந்து அறிவுணர்வால் காத்து வளர்த்து வளமாக்கிய முதன்மைத் தமிழ்மொழி, எங்கு அக்கு வேறாக ஆணிவேறாகச் சிதைக்கப் பெற்று உருமாறித் திக்குத் திசை தெரியாமல் திரிந்துபோகுமோ என்று உயிர் நடுங்க வேண்டியுள்ளது.

காலம் என்னும் கடும் புயற்காற்றையும், அது கைதொட்டுச் சிதைக்கும் பல்வேறு இயற்கைக் கோலங்களையும், அவற்றுள் சிக்கிச் சிதறுண்டு அழுந்திப் போகும் வழிவழி மெய்ம்மங்களையும் ஒருவாறு நாம் அறிவோம். எனவே எதன் பொருட்டாயும் நாம் உள்நடுங்கத் தேவையில்லை என்னும் இயல்பியல் மெய்ம்மக் கோட்பாடும் நமக்குத் தெரியும். இருப்பினும், கண்ணில் ஊமன் கையுள் கிடைத்த எண்ணில் மாட்சி இறும்பூதாம் நம் இயற்கைத் தமிழ், தேடறக் கிடைத்த நம் தெய்வத் தமிழ், மக்கள் வாழ்-வியல் கூறுகளையே தன் வளங்கொழிக்கும் சொற்களாகக் கொண்டு, புலம்பெருக்கும் நம் பொய்யாத் தமிழ், உலகியலில் சென்றுழலும் மாய்மாந்தக் கசண்டகற்றிப் பொய்மாந்தப் பூண்-டறுத்து, ஒளிச்சுடரேற்றி உளம் பெருக்கும் நலங்கிளர் மருந்தாம் நம் நறுந்தமிழ், தனக்கென அளாவிக் கொண்ட தன் தனிப் பெருங் கூட்டத்தினரால் இனங்கண்டு கொள்ளப்பெறாமல் இயல்

பழியக் கிடக்கின்றதே என்று மனங்குமுறும் ஏக்கப் பெருமூச்சு வரத்தான் செய்கிறது. அப்பெருமூச்சே காட்டுத் தீ போன்ற உள்ளுணர்வை நம்முன் கனல்விக்கின்றது. அக்கனற்கொழுந்தே மன நாக்குகளை இம் மக்கள் முன் பேசவைத்து இன நோக்குகளை அவர்களுக்கு விளங்கவைக்க உதவுகிறது. எனவே,'எம்மருந் தமிழ் மக்காள் இன்னறுஞ் செயல்கள் செய்ய இன்றே வாருங்கள்; இன்னே வாருங்கள்' என்று அறைகூவி அழைக்கின்றது நம் நெஞ்சம்!

புன்மையும் போலிமையும் கண்மயங்கக் காட்சிதரும் இக்கால இட நெரிசலுள், இன்மையும் இழிவும் நாடி எந்தமிழ் மக்கள் நெடுந் தொலைவு கால்கடுக்க மனங்கடுக்க நடந்து வந்து விட்டனர்; தம் செழுமை மிகும் வளவாழ்க்கையின் அறவேலியைத் தாண்டி இத் தமிழ் ஆட்டுக்குட்டிகள், கொடுமை மிகும் மற வாழ்க்கைக் கொடும் புதர்க் காட்டுள் ஓட்டிவரப் பெற்று விட்டன. இவற்றிற்கு இன்று இனந் தெரியவில்லை; மொழி தெரியவில்லை; வழி தெரியவில்லை, உலகிற்கே புலனறிவு புகட்டிப் பண்புப்பாடம் கற்பித்து நாகரிகம் நாட்டிய இவ்வினம், இன்று அனைத்துத் துறைகளிலும் நெறிகளிலும், தன் அறிவு நாக்கு வரண்டு, ஒளிவிழி ஒல்கி உணர்வுக் கூர்மை மழுங்கி, தள்ளாடும் கால்களுடனும் மல்லாடும் வயிற்றுக் காந்தலுடனும், வாய்க்கால் வழி ஓடிவரும் சாய்க்கடை நீருக்குச் சப்புக் கொட்டும் நாய்க் கடை வாழ்க்கை வாழும் வல்லடிமையாகிக் கிடக்கின்றது. அந்தோ, இதன் இழிவுதான் என்ன? இதன் விடிவுதான் எப்பொழுது?

ஊதற் காற்றுள் உடல் குறுகிக் கூனிக் கிடக்கும் ஓர் ஏழை போல் இன்று அயல் நிலத் தமிழர்கள் வாட, மோதற் கொள்கை அரசியலுள் இன்று முங்கிக் கிடந்து சாகின்றான். இத் தாய்நிலத் தமிழன். இவன் காலுள் மிதிபட்டுக் கிடக்கிறாள் எம் செந்தமிழன்னை. ஐயகோ, இத்தமிழன்னையை வாழ்விக்க எத்தனை முனிவோர் தவமிருந்து வாடினர்; எத்தனைப் புலவோர் பொறிகிளர்ந்து போற்றினர்; எத்தனை அரசர்கள் புலம் வென்று புரந்தனர். இன்று இவள் நிலை என்ன? கொச்சைத் தமிழும் கொடுந்தமிழுமாய் மொச்சை நாற்றம் வீசும் இவளின் நறிய மேனியைக் கழுவுவார் எவர்? கலப்புத் தமிழும் அலப்பு மொழியுமாய் இழப்புற்ற இவளின் செல்வத் தமிழைச் சீர்செய்வார் எவர்? தெருவெல்லாம் தமிழ் மணந்த இச் செந்தமிழ் ஊர்களைச் செப்பஞ் செய்வார் எவர்? ஏனிந்த தடுமாற்றம்! எப்படி நேர்ந்தது இவ்வேமாற்றம்?

வாடிய வரலாற்றுப் பயிரை நன்னீருற்றி வளஞ்செய்வார் இனி, நந்தமிழினத்தில் தோன்றுவாரா? கொடிய வாழ்வு நிலைகளை இனிக் கோடாது தூக்கி நிறுத்த வலிமறவர் கூட்டம் ஒன்று நந்தமிழகத்தில் வந்து தோன்றுமா? திரைப்படத் தொழுநோயும் பாலியற் கொடும் பிணியும், அரை அம்மணக் கூறுகளும் இறுகப்

பற்றி அலைக்கழிக்கப்படும் இவ்வேதுங் கெட்டு இழிதமிழ் மக்களைத் தடுத்து நிறுத்தி வடிவு செய்யும் ஆற்றலுற்றவர் தோற்றுவரா, இனி? தெருத்தெறும் ஊர்தொறும் நாற்றமடிக்கும் கழிகாமக் கயமைக் கூற்றுவர்களைச் சீற்றமுடன் ஒட்டி விரட்டி ஏற்றங்கொளுவும் முயற்சிகளில் தம்மை இழந்து கொள்ளும் போற்றுதற்குரிய காளைகள் இனி, நாற்றுக் கொளுவுமா? ஏக்கப் பெருமூச்சால் உயர்ந்து தாழ்கிறது நல்லவர் நெஞ்சம்;

'தமிழல்லால் தமிழரில்லை' என்று நாம் ஒவ்வொருவரும் உணரும் நாள் எப்போது? தமிழே நமக்கு வித்தாகத் தமிழினமே நமக்குச் சொத்தாக நாம் நமக்குற்ற நம் தமிழ்நிலத்தை ஆளுமை செய்வது எப்போது? எத்தனை இளைஞர்கள் இன்று இவ்வுண்மை நிலைகளை உணர்ந்திருக்கின்றனர்? நாற்றமடிக்கும் அரசியல் சகதியுள் தம்மை நலிவு செய்துகொண்டுள்ள—நமக்கென வாய்த்த—கொள்ளைப் பெருந் தலைவர்களின் கையடிக்கும் வாயடிக்கும் தம்மை ஆளாக்கிக் கொண்டு அறிவிழக்கும் தமிழரிடை, உண்மைத் தமிழ் ஆற்றலையும், உலகத் தமிழர் வாழ்வுகளையும் ஈடேற்றும் பெரு முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் உள்ளுரன் மிக்க—உளவூக்கம் குன்றாத—உண்மைத் தமிழ் நெஞ்சங்களை நாம் ஒன்றிணைக்கவேண்டும்; அவர்தம் உடல் நரம்புகளில் செந்தமிழ்க் குருதியைப் பாய்ச்சுதல் வேண்டும்; மரத்துப் போய்க் கிடக்கும் அவர்தம் நல்லுணர்வுகளில் தூய்த்தமிழ்க் சுவைப்பை மூட்டுதல் வேண்டும். தொய்ந்து கிடக்கும் அவர்தம் நெஞ்சங்களின் காற்றுப் பைகளில், பண்டைப் பசுந்தமிழின் நறுங்காற்றை ஓடவிட வேண்டும், மொத்தத்தில் அவர்தம் காட்சிகளை மாற்றல் வேண்டும்; கருத்துகளைப் புதுக்கல் வேண்டும். அவ்விடத்துச் செந்தமிழின் மாட்சிகளை வேரூன்றச் செய்தல் வேண்டும். போலி நாகரிகத்தாலும் புன்மைச் செயல்களாலும் அழுந்திக் கிடக்கும் அவர்தம் தோள்களை விடுவித்தல் வேண்டும். துளியும் சோர்ந்து போகாமல் ஒருபெரும் வலிந்த முயற்சியில் இவ்வெற்றிகளைக் குவித்தல் வேண்டும்;

தமிழே இவ்வெற்றிக் களத்தின் வெல்கருவி. தமிழே இவ்வரு முயற்சியின் வழித்துணை. தமிழே இவ் வருமைப்பாட்டின் வழிநடைப்பண். மற்றபடி, அரசியலென்றும் பொருளியல் என்றும்; சாதி என்றும் சமயம் என்றும் கூக்குரலிடும் வலிமையற்ற ஓலங்களால் வந்து வாய்க்கப் போவது ஒன்றுமில்லை. தமிழை விடுத்துத் தமிழர்களை ஒன்றிணைக்க முடியாது; தமிழை மறந்து தமிழ் நாட்டை வளமுறச் செய்தல் இயலாது: தமிழைத் தாழ்த்தித் தமிழ்ப் பண்பாட்டைச் சமைத்தல் ஒல்லாது; தமிழைத் தவிர்த்துத் தமிழினத்திற்கு நலந்தேடி விடல் நடவாது! பல்வேறு முயற்சிகளும் பல்வேறு வகையான விடிவுக்குப் பயன்படலாம், ஆனால் தமிழியல் மரபுகளே தமிழினத்தைக் கட்டிக் காக்க வல்லன. இவ்வுலகின்கண் வெளிப்பாடுற்ற ஒவ்வோர் உயிரினத்தின் முழு மலர்ச்சியும், அதனதன் உள்ளுயிர்க் கூறுகளை மலர்த்திக்

கொள்வதில்தான் நிலைப்பாடுற்றுச் சிறந்தியங்கக் கூடும். உள்ளுயிர்க் கூறுகள் சிதைக்கப்பெறும் எந்த உயிரினமும் இந் நீணிலத்தில் நெடுங்காலம் நின்று வாழ்ந்ததில்லை. இஃது ஓர் உயிரின வரலாற்றுண்மை. இவ்வடிப்படை உண்மை எத்தனை அறிவியல், வாழ்வியல் வளர்ச்சி மாற்றங்களாலும் சிதைக்கப் பெறல் முடியாது. சிதைக்கச் சிதைக்கச் செழித்து வளரும் தகையது இது.

எனவே, பகுத்தறிவென்றும், புதுமைப் புரட்சி யென்றும் அறிவியல் தாக்கம் என்றும்—புதுப்புதுப் போலித் தருக்கங்களால் உள்ளீது சிதைக்கும் இயற்கைக்கு மாறான புல்லிய முயற்சிகளில் இளைஞர்கள் சிக்கிச் சீரழிதல் வேண்டா. ஓர் ஆலமரம் வளர வளரத் தனக்கடிப்படையான ஆலம் வித்தின் தன்மைகளை இழந்து விடுவதில்லை; கரும்புக் கழனிக்குள் வைத்து வளர்க்கப் பெற்றாலும் கள்ளிப்பாலின் தன்மை மாறுவதில்லை. காக்கைக் கூண்டுக்குள் வாழ்க்கை நடத்தும் குயில் எப்பொழுதும் தன் இயற்கைக் குரலை மாற்றி ஒலிப்பதில்லை. அவ்வாறு மாற்றி ஒலிக்குமாயினும் அது தன்னைக் குயில் என்று கூறிக்கொள்ளல் இயலாது. மாந்த இனம் உலகெங்கும் ஒன்றேயாகலாம். ஆனால் அவ்வினத்தின் பல்வேறு இயற்கைக் கூறுகள், அவ்வவ் விடங்களுக்கேற்பவும் வெப்ப தட்பங்களுக்கு ஒப்பவும், அவ்வவ் வினை உணவு விளைவுகளின் அடிப்படையிலும், அவ்வவ் வினை மக்களைத் தனித்தனி ஒலித்திறன்களைக் கொண்டவர்களாகவும், தனித்தனி உள்ளுணர்வுகளைக் கொண்டவர்களாகவும், தனித்தனி நடைமுறைகளைச் சார்ந்தவர்களாகவும் சிறப்புறச் செய்கின்றன. இவ்வியற்கை உருவாக்கத்தைச் சிதைத்தல் இயலாது. இதன் சிறப்பியல்களைக் குலைத்தலும் முடியாது. அவ்வாறு தன் இயல்புகளைச் சிதைத்துக் கொள்ளும் ஓரினம் தன் தனித் தன்மையை அதைப் பொறுத்த அளவில் இழந்துவிட்டாலும், கால அடைவில் அது வேறோர் இனத்தின் தனித்தன்மைக்குந் தன்னை அடிப்படுத்திக் கொள்ளவே நேரும். குரங்கு ஒரு கிளையை விட்டால் மறு கிளையைப் பற்றியே ஆகல் வேண்டும். ஒரு கிளையிலேயே வாழ விரும்பாமல் அயற் கிளைகளுக்குத் தாவும் குரங்குகள் இருக்கலாம். ஆனால், அவை பொருட்டால், அக்கிளையில் மிகுந்துள்ள மற்ற அத்தனைக் குரங்குகளின் சிறப்பு நிலைகளையும் அழித்துக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று எந்தக் குரங்கும் வாய்வாள முடியாது. உணர்வு மாறிகளுக்கு எப்படித் தாம் வாழும் உரிமை உண்டோ, அப்படியே தன்னுணர்வு மிக்கவர்கள் தாமும் வாழ உரிமை உண்டு. எனவே, கிளை மாறும் குரங்கினங்கள் போல் தம்மைச் சிறப்பழித்துக் கொண்டு உளந்திரிந்த உணர்வு மாறிகள் போக, எஞ்சியுள்ள தம் தமிழியல் மரபுகளைக் கட்டிக் காக்கும் முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும். அதற்கு அடிப்படையாக நம் உள்ளுணர்வாம் மூலத் தமிழ் மூவா மொழியை வலிந்து பற்றிக்கொண்டு அதனை மேன்மேலும் வளரச் செய்தல் வேண்டும்; வாழச் செய்தல் வேண்டும் அந்த நல்ல நாள் நமக்கு மிகவும் நெருங்குவதாகுக!

—பெருஞ்சித்திரனார்.

பெருமித வாழ்க்கை!

— புலவர் அறிவுடைநம்பி, மூலனூர்.

உலகில் பலகோடி மக்கள் வாழ்கிறார்கள் முன்னரும் வாழ்ந்து மறைந்திருப்பர். வரலாறு தொடங்கிய நாள் முதல் இன்று வரை, எவ்வளவு பேர் வாழ்ந்து மறைந்தார்கள்? எவ்வளவு பேர் வாழ்கின்றார்கள் என்று யாராலும் சொல்ல முடியாது. ஆனால் வரலாற்றுத் தொடக்கம் முதல் இன்று வரை, ஒரு சிலர் உலகில் ஆங்காங்கே, வாழ்ந்ததற்கான, வாழ்ந்து வருவதற்கான அடையாளங்கள் மட்டும் மறையாமல் இருக்கின்றன. அவர்களை வள்ளுவர் மொழியில் கூறுவதானால், வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். செயற்கரிய செய்தவர்கள், என்பும் உரியர் பிறர்க்கு என்ற நிலையில் வாழ்ந்தவர்கள், மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் போன்று வாழ்ந்தவர்கள். இப்படி எவ்வளவோ கூறலாம். அதுதான் அவர்களது அடையாளங்களாக மக்கள் அறிய இருப்பவை. இன்னொரு புறம், எவ்வளவோ பேர் செல்வத்தில் புரண்டிருக்கலாம். இன்பத்தில் திளைத்திருக்கலாம். நினைத்தபடியெல்லாம் தங்கள் அதிகாரத்தை மற்றவர்கள் மேல் ஏவி மகிழ்ந்திருக்கலாம், சொல்லொணாக் கொடுமைகள் செய்து மகிழ்ந்திருக்கலாம். நன்கு தின்று கொழு கொழுவெனக் கொழுத்திருக்கலாம். துறக்க உலகம் போன்ற வள மனைகளில் மகிழ்ந்து வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் இருந்த சுவடே கிடையாது. இவர்களில் சிலர் இருந்தது அந்த ஊரில் இருந்தவர்களுக்குக் கூடத் தெரியாமல் இருக்கலாம்; இருந்திருக்கலாம்; பெரும்பாலோர் நிலை இவ்வாறுதான்.

சித்தார்த்தன் அரண்மனை வாழ்வை விரும்பியிருந்தால் புத்தனாகப் புகழ்பெற்றிருக்க முடியாது; ஆட்சியாளருக்கு அடிமையாகியிருந்தால், பிளாட்டோ உலகப் பேரறிஞனாகியிருக்க முடியாது. தீரன் சின்னமலை, பூலித்தேவன், வேலுநாச்சி, மருதுபாண்டியர்கள், கட்டபொம்மன், உடன்பிறந்தோர், ஆங்கில வல்லாண்மைக்கு அடிபணிந்திருந்தால், அவர்கள் வரலாறு தமிழகத்தில் இல்லை. இயல்பான புலவராக வாழ்ந்திருந்தால், கனக சுப்புரத்தினம், புரட்சிப் பாவலராக, பாவேந்தராக, ஆகியிருக்க முடியாது. செல்வச் செழிப்பிலே மிதந்திருந்தால், ஈ.வே. இராமசாமி, பெரியாராகப் பெயர் பெற்றிருக்க முடியாது. ஏதோ ஓர் உயர்ந்த அரசு அலுவலில் அமர்ந்து இனிய வாழ்வு வாழ்ந்திருந்தால், அண்ணாதுரை, பேரறிஞர் அண்ணாவாக விளங்கியிருக்க முடியாது. இப்படி எத்தனையோ சான்றோர்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் அத்தகைய சான்றோர்கள் வாழ்ந்த, கொள்கைகள் பரப்பிய தமிழகத்தின் நிலை எவ்வாறு உளது. அவர்கள் வளர்த்த கொள்கை, பண்புகள் எவ்வாறு இருக்கின்றன? அவர்களின் வழியில், வாழையடி வாழையாக வந்து வாழ்பவர்கள் எவ்வளவு பேர்? அவலம்தான் எங்கும். இருந்தாலும், முற்றாக அவை அழிந்துபோகவில்லை, அழிந்து

போகவிடாமல் சிலரேனும் பார்துகாத்து வருகின்றனர்; என்பது நம்பிக்கை தரும் செய்தி. அத்தகையவர்களில், தலையாயவராக, அடல் ஏறாக, ஆண்மையின் வெளிப்பாடாக, தன்மானத் தணலாக, கொள்கைக் குன்றாக, தமிழினத்தின் மாசுபடாத நம்பிக்கை யொளியாக விளங்குபவர் தன்மானத் தமிழர், உணர்ச்சிப் பிழம்பு பாவலரேறு. பெருஞ்சித்திரனாரேயாவார்.

பாவலரேறு இன்றுவரை பல திங்களாகச் சிறையில் வாடி வதங்குகிறார். அதிலும் கொடுமையான செயல், கொள்ளையர், கொலைகாரர், கடத்தல் பேர்வழிகள் ஆகியோர்களுக்கு வழங்கப் படும், கொடுமையான ஆள் தூக்கிச் சட்டமான தடாச் சட்டத்தில் தளைப்படுத்திச் சிறையில் வைத்துள்ளது தமிழக அரசு. 'புனிதவதி' ஆட்சி புரியும் பொற்கால அரசு, 'மனுதரும ஆட்சி' புரியும் மாண்புகள் அரசு. தமிழகத்தில் தமிழுணர்வின் வடிவமாகத் தமிழினத்தின் மேன்மைக்காக; உயிரும் உணர்வும், மூச்சும், பேச்சும் அனைத்தும் தமிழின மேம்பாட்டிற்காக உழைக்கும் தமிழ்ப் பேரறிஞனுக்குத் தமிழக அரசு கொடுத்த பரிசு; தடா சிறையாளியாகச் சிறைக்கோட்டத்தில் இருக்கச்செய்துள்ள கொடுஞ் செயல்.

அப்படி அவர் என்ன கொடிய செயலைச் செய்தார்; கோடி, கோடியாக மக்கள் பணத்தை அள்ளி மூட்டை கட்டிக் கொண்டாரா? பள்ளிகள் நடத்துவதாகக் கூறிப் பகல் கொள்ளையடித்தாரா? அரசுப் பணத்தைத் தங்கள் பணமாகவேஎண்ணி ஆளுக்குக் கொஞ்சம்—தவறு; கொஞ்சமன்று—கோடிக்கணக்கில், ஆளுக்குச் சிலகோடிகளை அள்ளிக்கொள்ளத் துணை போனாரா? அரசுக்கு உரிமையான சொத்துகளைத் தனியாருக்குத் தாரை வார்த்து அதற்குக் கைமாறாகப் பல கோடிகளை அள்ளிக் கொண்டுபோய்ப் பெட்டியில் பூட்டிவைத்துக்கொண்டாரா? ஏழை எளியமக்களுக்கு இயலாத உறுதிமொழிகளையெல்லாம் கொடுத்து, ஒப்போலை பெற்றபின் உதறித் தள்ளினாரா? ஒவ்வொரு நாளும் நலத் திட்டங்களை ஏராளமாக அள்ளி வீசிக் கொண்டு மக்களை வஞ்சித்துக் கொண்டுள்ளாரா? மதவெறி கொண்ட கழிசடைக் கும்பல்களுக்கெல்லாம், மனுநெறிக் கும்பல்களுக்கெல்லாம் புகலிடம் தந்து தமிழகத்தை அரத்தக் களறியாக்கிக் கொண்டிருக்கிறாரா? கள்ளக் கடத்தல் பேர்வழிகள், கள்ளச் சாராயக் கும்பல்கள் இவர்களுடன் கைகோத்துக்கொண்டு பணத்தை அள்ளி மூட்டை கட்டிக் கொண்டிருக்கிறாரா?

அரசுக்குரிய மருத்துவக் கல்லூரி அதற்குரிய சொத்துக்கள் ஆகியவற்றைத் தனியாருக்குத் தாரைவார்த்துப்பெருந் தொகை பெற்றுக்கொண்டாரா? தனது மண்ணின் விடுதலைக்காக, மொழி, இன விடுதலைக்காகப் போராடும் தமிழின மக்களைக் கொன்று சிறையில் தள்ளி உறுப்புச் சிதைவு செய்துகொண்டிருக்கிறாரா? ஆளுக்கொரு பேச்சு, இடத்துக்கொரு கொள்கை, கூறி மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறாரா? ஆட்சியாளரே, செய்யாத

அரசு எதற்கு? அந்த நாட்டின் மக்கள் நலன், மொழி, பண்பாட்டு நலன், அறநெறி காத்தல், தீயவர்களைத் தண்டிப்பது ஆகியவற்றிற்குத் தானே. இங்கே என்ன நடக்கிறது? தலைகீழாகவன்றோ இருக்கிறது? இத்தகைய ஆட்சிகள் அமையவேண்டும் என்பதற்கா பல்லாயிரம்பேர் பல்லாண்டுகள் போராடி, அதனால் தங்கள் வாழ்க்கை நலன்களை ஈகம் செய்து விடுதலை வாங்கினர்? ஆங்கிலேயனை ஏன் எதிர்த்தோம், நமது பொருள் வளம் சுரண்டப்படுகிறது; மொழி,பண்பாடு அழிக்கப்படுகின்றன; நமது தனித்தன்மை சிதைக்கப்படுகிறது; பொருளியல் ஏற்றத்தாழ்வு பெருகுகிறது; வெகுமக்கள் ஒடுக்கப்படுகின்றனர்; அடக்கப்படுகின்றனர்; கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்; நமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. வெள்ளையன், நாட்டாலும், இனத்தாலும், மொழியாலும், பண்பாலும் அயலவன். எனவே அவன் ஆட்சி அகற்றப்பட்டால் ஒழிய நாம் உரிமை வாழ்வு பெறமுடியாது என்பதால் தானே? ஆனால் விடுதலைப் பெற்று அரைநூற்றாண்டு நெருங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் வெள்ளையன் ஆட்சியில் இல்லாத கொடும் சட்டங்கள் இருக்கின்றன என்றால், இதுவா உரிமை வாழ்வு?

இதைத் தானே பாவலரேறு மக்களிடம் கூறுகிறார்: நமது நலன்கள் கெடுக்கப்பட்டால், அவன் வெள்ளையனால் இருந்தாலென்ன? சீனனாய் இருந்தாலென்ன? இந்திக்காரனாய் இருந்தாலென்ன? எல்லாம் ஒன்றுதான். எனவே இந்தியக் கூட்டாட்சியில் தமிழன் நலம் பெறமுடியாது, அவன் அடிமையாகத்தான் இருக்கமுடியும்; அப்படித்தானே இருக்கிறோம். 'தமிழன்' விடுதலை பெறவேண்டுமானால் தமிழ்நாடு விடுதலை பெறவேண்டும் என்பது பாவலரேறு கருத்து. அதை மக்களிடம் கூறுகிறார். இழி செயல் புரிவோரை இரக்கமின்றிக் கடிந்துரைக்கிறார். இது தவறா? வள்ளுவர் என்ன சொல்கிறார். என்று கவனித்தோமா?

''இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்''
குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியோடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து,

எனச் சும்மாவா சொன்னார். 'மனுதர்மவான்களுக்கு இது விளங்காது; உரிமையுணர்வுகளைச் சிறைக் கம்பிகள் தடுத்துவிட முடியாது. தடா, மொடாச் சட்டங்கள் தடுத்துவிட முடியாது. தமிழன் இன்று பொறுப்புக்களில் உள்ளவன். தன்மானமிழந்த, பொறுக்கித் தின்னிகளாய் இருக்கலாம். ஆனால் எல்லாக் காலத்திலும் எல்லாரும் அவ்வாறு இருந்துவிட மாட்டார்கள்.

எனவே தமிழ்நாடு அரசு இனியாவது தன்னைத் திருத்திக் கொண்டு தவறுகளைச் சுட்டிக்காட்டியவர்களைத் தளைப்படுத்து-

(தொடர்ச்சி 24-ஆம் பக்கம்)

மரங்கள் நிலத்தடி நீரையும் காற்றில் உள்ள ஈரத்தையும் உறிஞ்சி வளரும் தன்மையுடையன. இம் மரங்கள் உண்டானதால் ஏரிகளும், குளங்களும் மற்றும் புறம்போக்கு நிலங்களும் மக்களுக்கு எப்பயனும் இல்லாமல் செய்துவிட்டது.

'உற்பத்திப் பெருக்கம்—உழவர்களுக்குப் பெருத்த இலாபம்' என்று முதலாளிகளால் விளம்பரப்படுத்தப்பட்ட புதிய வேளாண்மை முறையில் கருவிகள், வேதியல் உரங்கள், பூச்சி பூஞ்சாண மருந்துகள் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப் பட்டும, உழவர்கள் அனைவரும் கடனாளியாகி டியாகி விட்டனர்.

உழவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படக்கூடிய மாடுகள், ஆடுகள், கோழிகள் ஆகிய அனைத்தின் மரபுக் கூறுகளும் அழிக்கப்பட்டு வேளாண்மையைப்போல் வல்லரசு நாடுகளைசார்ந்து இருக்கக் கூடிய கால்நடை இனங்களை இங்கு உருவாக்கி விட்டனர். பசுமையான புல்லையும் தழைகளையும் தவிட்டையும் புண்ணாக்கையும் உண்டு நல்ல செழுமையாக வளர்ந்திருந்த கால்நடைகள் இன்று புதிய புதிய தீவனங்களையும் மருந்துகளையும் கொண்டு வளர்க்க வேண்டியிருக்கின்றன. இதனால் உழவர்களுக்கு வேளாண்மையிலும் கால்நடை வளர்ப்பிலும் எந்தப் பயனும் இல்லை.

சுற்றுச் சூழல் சீர்கேடு :

தேவைக்கு ஏற்பவும் மண்ணின் தன்மைக்கு ஏற்பவும் வேளாண்மை செய்வதை விட்டுவிட்டு முதலாளிகளின் ஆசைச் சொற்களில் மயங்கி, அதிகமான வேதியல் உரங்களையும், பூச்சி பூஞ்சாண மருந்துகளையும் பயன்படுத்தியதால் மண்ணின் தன்மையும் நீர் நிலைகளும் மற்ற சுற்றுப்புற சூழ்நிலைகளும் கெட்டு விட்டன. வர வர மண்ணின் வளம் பாதிக்கப்பட்டு விளைச்சலும் குறைந்து விட்டது.

முதலாளிகளின் நகர வளர்ச்சிக்காகவும் வெளிநாட்டு முதலாளிகளின் சுரண்டலுக்காகவும் மலைப்பகுதிகளில் இயற்கையாக வளர்ந்திருந்த மிகப்பெரிய மரங்கள் எல்லாம் வெட்டப் பட்டும் காடுகள் அழிக்கப்பட்டும் குளம்பி, தேயிலை. ஏலம், மிளகு போன்ற பணப் பயிர்கள் பயிரிடப்பட்டதால், இயற்கையின் சமச் சீர்நிலை கெட்டு, சமவெளிப்பகுதிகளில் பருவமழை மிகவும் குறைந்து விட்டது. மலைப்பகுதிகளில் விளையும் பொருள்களின் ஊதியம் அனைத்தும் வடநாட்டு முதலாளிகளுக்கே செல்கின்றது. பொருள்களை விளைவித்த தமிழ்நாட்டுப் பாட்டாளி மக்களுக்கு இல்லை.

நீர்வளம் குறைந்ததாலும் கிணறுகள் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை அதிகம் பயன்படுத்துவதாலும் சமவெளிப் பகுதிகளிலுள்ள மரங்களே பட்டுப்போகும் சூழ்நிலை தமிழ்நாட்டில் தோன்றியுள்ளது. கடலோரப் பகுதிகளில் கடல்

நீர் நிலத்தடியில் புகுந்து குடிநீருக்கே தட்டுப்பாடு வந்துவிட்டது. இந்திய ஒருமைப்பாடு பேசும் போலி அரசியல் காரர்கள் தமிழ்நாட்டிற்கு தொன்று தொட்டு கிடைத்துக் கொண்டிருந்த காவிரி நீர் கிடைக்காத சிக்கலை நிலையாகத் தீர்க்க முடியாமலும், கேரளப் பகுதியில் வீணாகக் கடலில் கலக்கும் நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட முடியாலும் பதவிகளைப் பிடிப்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.

ஆப்பிரிக்காக் கண்ட நாடுகளின் இயற்கை வளங்களை வெள்ளை முதலாளிகள் ஒட்டச் சுரண்டிவிட்டதைப் போல், இன்று தமிழ் நாட்டின் இயற்கை வளங்களேயும்—கனிவளங்களான இரும்பு, நிலக்கரி. எண்ணெய் போன்றவற்றையும் இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரிலே ஒட்டச் சுரண்டுகின்றனர்.

மக்களுக்குத் தேவையில்லாத, உடல் நலத்தைக் கெடுக்கக் கூடிய வேதியல் பொருள்களை உண்டாக்கும் தொழிற்சாலைகள் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் தொடங்கப்படுவதால், அதன் கழிவுகளால் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிலமும் நீர்நிலைகளும் வான்மண்டலமும் கடலும் பாதிக்கப்பட்டுவிட்டன; இதனால் மக்கள் உடல் நலனும் கெட்டு. மீன் வளமும் கெட்டு குறைந்து, மீனவர்களின் வாழ்க்கையும் துயர நிலைக்கு வந்து விட்டது.

மக்களின் உடல்வளமும் மருத்துவமும்:

புதிய முறையில் செய்யப்படும் உணவுப் பொருள்களில் இயற்கை ஊட்டம் குறைவாக இருப்பதாலும், போதிய ஊட்டமுள்ள உணவுப் பொருள்கள் உழைக்கின்ற மக்களுக்குக் கிடைக்காததாலும் மக்கள் உடல் நலம் குன்றி, உழைப்புத் திறனும் குறைந்து, பற்பல நோயில் வாடுகின்றனர்.

மக்களுக்குப் புதிய புதிய நோய்களும் உருவாவதால், புதிய புதிய மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டு, பன்னாட்டு மருந்துக் குழுமங்களும் மருத்துவர்களும் பெரிய பெரிய முதலாளிகளாக வளர்ந்து வருகின்றனர்.

மண்ணிற்கேற்ற எளிமையான செலவு குறைந்த தமிழ்நாட்டுத் தமிழ்(சித்த) மருத்துவம் வெளிநாட்டு முதலாளிகளால் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. அரசு ஆதரவும் மக்கள் ஆதரவும் இல்லாததால் சித்த மருத்துவர்கள் தங்கள் திறமையை வளர்க்க வழியில்லை. இன்று சிற்றூர்ப் புறங்களில் சில நோய்களுக்கான மூலிகைகளின் பெயர்களைக் கூட மறக்கும் சூழ்நிலை உருவாகிவிட்டது.

வல்லரசு நாடுகள் அணுக்குண்டு செய்வதற்காக மின்சாரம் என்ற பெயரில் அணுமின் உலையை தமிழ்நாட்டில் நிறுவி எதிர்கால—தமிழ் மக்களின் உயிருக்கே ஆட்சியாளர்கள் உலை வைக்கின்றனர். அணுக்கதிர் வீச்சு மண்ணையும் பல தலைமுறையையும் கெடுக்கும் என்பதைத் தெரிந்திருந்தும், வல்லரசு

நாடுகள் தங்கள் நாட்டில் அணுமின் உலையை மூடிவிட்டு தமிழகத்தின் தரகு முதலாளிய அரசின் துணையோடு இதை அமைக்கின்றனர்.

ஆக எல்லா நிலையிலும் தமிழ்நாடு பாலைநிலமாக்கப்படுவதற்கான சூழல் உருவாகிவிட்டது. இன்று சில வல்லரசு நாடுகள் உணவுப் பொருள்களுக்குத் திண்டாடுவதைப் போல் தமிழ் நாட்டு மக்களும் உயிர் வாழ முடியாத சூழல் உருவாகும். ஆகவே தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அதாவது உழவர்கள் தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், ஊழியர்கள் இளைஞர்கள், மாணவர்கள் ஆகிய பாட்டாளி மக்கள் அனைவரும் ஓரணியாக இணைந்து செயல்படவேண்டும். நம் வாழ்க்கைக்கு—வளர்ச்சிக்கு—ஒற்றுமைக்குத் தடையாக உள்ள சிந்தனையில்—செயலில் இறங்கவேண்டும். இல்லையென்றால் தமிழ்நாடு பாலைநிலமாக்கப் பட்டு தமிழினமே அழிவதற்கான சூழல் உருவாகிவிடும்.

முடிவுரை: இறுதியாக இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒரு வேண்டுகோள்: நாம்தான் இந்தப் அழிவு நிலைகளை முதலில் விளங்கிக் கொள்ளமுடியும். இந்தக் கேடுபாடு எல்லாம் இளைஞர்களும் மாணவர்களும் விளங்கிக்கொள்ள முடியாதபடிக்கு, தங்களை சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கைத் துயரங்களை விளங்கிக் கொள்ளாத, தந்நல நோக்குள்ள, மாந்தநேயத் தன்மையற்ற, முதலாளியச் சிந்தனையை வளர்க்கும், விளங்காமல் மனப்பாடம் செய்யும் கல்வி நமக்கு புகுத்தப்படுகிறது. கலை என்ற பெயரில் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் பண்பாட்டைச் சீர்குலைக்கும் திரைப்படங்களும் நாடகங்களும் காண்பிக்கப்படுகின்றன. மாணவர்களின் மொழிப்பற்றையும், இனப்பற்றையும் அறிவுக் கூர்மையையும் மழுங்கடித்து அடிமையாக்குவதற்காகவே இன்று நமக்கு தாய்மொழி வழியான தமிழ்மொழி வழிக் கல்வி மறுக்கப்படுகிறது. ஆகவே இளைஞர்களே! மாணவர்களே, எதிர்காலத் தமிழகம் பாலைநிலமாகாமலும், நம் தலைமுறை தொடர்ந்து உரிமையோடு வாழ்வதற்கும் தமிழகப் பாட்டாளி மக்களை ஒன்றுதிரட்டுவோம்! வெற்றி பெறுவோம்!! O

வழக்குச் செலவுகள்! ஒரு வேண்டுகோள்!

பார்ப்பனக் கொடுநெறி அரசு. தமிழர் உரிமைக்காகப் போராடிவரும் நம் பாவலரேறு மீதும் அவர் தம் மகனார் மீதும் 'தடா' என்னும் கொடிய அடக்குமுறைச் சட்டத்தை ஏவிவிட்டிருப்பதையும், பாவலரேறு அவர்களைத் தொடர்ந்து சிறையிலடைத்திருப்பதையும் அன்பர்கள் அறிவார்கள். பாவலரேறு அவர்களைப் பிணையலில் வெளியே கொண்டு வருவதற்கும், தொடர்ந்து வழக்கு நடத்துவதற்கும் பொருள் தேவை என்பதை அன்பர்கள் உணர்வார்கள்.

ஆகவே வழக்குச் செலவுகளுக்குப் பங்கேற்றுக் கழகத்தினரும் அன்பர்களும் ஆர்வலர்களும் நன்கொடை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—அமைச்சர்.

'தமிழ்வழிக் கல்வி'

—மு. உலகமுதல்வன க.மு; (இல) க.மு; (வர) க.மு, (அர)
பிரிவு அலுவலர் புதுவைப் பல்கலைக்கழகம்.

''என்று தோன்றியது என்று எவராலும் கட்டுரைத்துச் சொல்ல முடியாதது தமிழ்! மிகவும் தொன்மை வாய்ந்தது. திராவிட மொழிகளின் தாய்; உலகின் முதன்மொழி; உயர் தனிச் செம்மொழி; ஆரியத்திற்கு முந்தியமொழி; ஆரியத்திற்கு மூலமொழி; சொல் வளமிக்க தற்சார்புமொழி; வேர்ப்பொருள் காட்டும் மொழி''! மொழிஞாயிறு, மொழிநூல் மூதறிஞர் பாவாணர் .செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி. முதல்மடலத்தில் தம் நுண்மான் நுழைபுலத்தால் நன்காய்ந்து உயர் தனிச் செம்மொழி (The Primary Classical language fo the World) தமிழே என்று நிலைநாட்டியுள்ளார்.

தமிழ் என்றாலே இனிமை என்று தானே பொருள். அமிழ்தினும் இனியது, தேனினும் சிறந்தது. சிந்தனையைத் தூண்டவல்லது. அறிவைத் தூண்டும் ஆற்றல் பெற்றது. பிறமொழி படித்தாலும் தமிழ் வழிதான் (Via Media) பொருள் கொள்ள முடியும்; தமிழில் அறிவைப்பெறாமல் பிறமொழியில் பெறலாமென நினைப்பது குதிரைக்கொம்பே!

கடந்த நாற்பதாண்டுகளாக, மொழி—இனம்—நாடு என்ற அடிப்படையில் இம்மியளவும் பிறழாமல் தமிழுக்கும், தமிழின விடுதலைக்கும், தன்னை முழுவதும் ஈகப்படுத்திக் கொண்ட பெருமை 'தென்மொழி'யையே சாரும் என்பதில் எவருக்கும் ஐயம் இல்லை. தாய்மொழிக் கல்வி, தமிழ் வழிக் கல்வி—இவற்றிற்கு வித்திட்டதே 'தென்மொழி' தான்! இன்று தமிழகமெங்கும் தமிழ்வழிக் கல்வி பற்றிக் குரல் எழுப்புகின்றனர்; இத்தகைய உணர்வைத் தட்டியெழுப்பிய பெருமை தென்மொழியையே சாரும். தமிழ் நாட்டில் முன்பைவிட ஆரிய அடிமைகளும், பிறமொழி அடிமைகளும் மலத்தை நாடிவரும் ஈக்களைப் போன்று பல்கிப் பெருகியுள்ளனர். இவர்களுக்கு தமிழினப் பகைவர்களும், மொழிக்கேடர்களும் உறுதுணையாக புறப்பட்டுள்ளனர். தன்மானமிழந்த இந்தக் கோழைகள் தமிழைக் காட்டிக்கொடுப்பதிலும், தமிழினத்திற்குக் கீழறுப்புவேலை செய்வதிலும் முனைந்து ஈடுபட்டு வருகின்றனர். அதனால்தான் தமிழகத்துப் பட்டிதொட்டிகளில் எல்லாம் ஆங்கில வாயில் மழலையர் பள்ளிகள் புற்றீசல் போல பொலபொலவென்று, பல்கிப் பெருகியுள்ளன. குடிக்க ஒருவேளைக் கஞ்சி இல்லாவிட்டாலும், இந்த வக்கற்ற தமிழன் தன் பிள்ளைகளை ஆங்கிலம் படிக்க அனுப்புவதிலும் தான் சப்ரிமலைக்கு மூட்டை தூக்குவதிலும் கண்ணுயிருக்கிறானேயன்றி மொழி, இனம், நாட்டின்மீது ஆர்வம் செலுத்திலன். எனவே வந்தேறிகள் இவனை குனிய குனிய குட்டுகின்றனர். கடன் சுமையினால் நம்பியவர்களை மனைவி

மக்களை நட்டாற்றில் விட்டுவிட்டு மாய்ந்து போகிறான். எனவே இந்த இனமே காலப்போக்கில் அழிந்துபடுகிறது.

கல்வியாண்டுத் துவக்கத்திலேயே, நகரெங்கும் உள்ள குட்டிச் சுவர்களில் (பெண்கள் வயிற்றெறிச்சலால் குட்டிச்சுவராய்ப் போக என்று கரித்துகொட்டுவார்கள்) ஆங்கிலப் பள்ளிகளின் திறப்புவிழா குறித்துச்சுவரொட்டிகள் காணப்படும். கடுமையான வறட்சி, பஞ்சம் இவற்றைப் பொருட்படுத்தாமல், தமிழன் வட்டிக்கு கடன் வாங்கி வேலைவெற்றிக்குசெல்லாமல். பிள்ளைகளின் சேர்க்கைக்குக் காலொடிந்து போகுமாறு மணிக்கணக்கில் நிற்பான். சீருடைகள் தைக்க வரிசை, கழுத்தில் மாட்டும் கழுத்துக் கயிறு (Tie) வாங்க வரிசை, காலணிகள் வாங்க வரிசை எழுதுபொருள்கள் வாங்க வரிசை; ஆங்கிலப் பள்ளி, நடத்தும் போலிகளின் வீட்டு முன் கைக்கூலி வழங்க வரிசை. இப்படி வாழ்நாளில் பாதியை நின்றே கழித்து விடுகிறான். கட்டணம், நன்கொடை என்ற பெயரில் மாபெரும் சுரண்டல் நடைபெற்றுவருவது அனைவரும் அறிந்ததே! போலிப் புனைவுகள், போலி ஆரவாரங்கள், மேனுமினுக்கி வேலைகள் போன்றவைகளைப் படியெடுப்பதில் தமிழன் வல்லவன்! நேரே எருதந்துறை பல்கலையில் பட்ட மேலாய்வை மேற்கொள்ள போகிற நினைப்பில், கடன் உடன்பட்டு பிள்ளைகளை ஆங்கிலம் பயில வைக்கிறான். 'இங்கிலீசில்' படித்துவிட்டு வந்து, அவர்கள் மீண்டும் குப்பனிடமும் சுப்பனிடமுமே கடையை விரித்து, தமிழை வணிகம் செய்து வயிறு பிழைக்கின்றனர். எத்தனைமொழிகள் கற்றாலும் தாய்மொழியின் வழிதானே பொருள்கொள்ள முடியும்! அப்படியானால் உன் உயிரையும், உடலையும் வளர்ப்பது தமிழ்தானே!

இத்தகைய ஆங்கில மழலையர்ப் பள்ளிகள் தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலும், பட்டிதொட்டிகளிலும் பல்கிப் பெருகியுள்ளன. இத்தகைய நச்சரவுகள் தமிழ்மொழியின் வளர்ச்சியைத் தடை செய்வதோடு மட்டும் அல்லாமல், முன்னேற்றத்திற்கும் தடைகற்களாய் நிற்கின்றன, மழலையர்களுக்குள்ள தாய்மொழிப் பற்று மழுங்கடிப்பட்டும் வருகிறது. ஆங்கிலத்தின் மீதுள்ள கண்மூடித்தனமான, ஒரு போலியான உணர்வே இதற்கு முதல் காரணியமாகும். ஏற்கனவே தமிழன், பார்ப்பனப் பனியாக்கள் மற்றும் வடநாட்டு கொள்ளைக் கும்பல்களின் சுரண்டல்களில் இருந்து எழுந்திராமல் இருக்கிறான்; ஆங்கில மழலையர்ப் பள்ளிகளின் பெருக்கத்தினால் இன்னும் கொஞ்ச நாட்களில் தன் சொந்த நாட்டிலேயே ஏதிலியர்க்கப்படவிருக்கிறான். தமிழ் தமிழர் நலனில் அக்கறையுள்ள அனைவரும் ஓர் அணியில் திரண்டெழுந்தாலொழிய, இக்கொடிய நச்சரவை அழிக்க முடியாது என்பதைத் தமிழர்கள் அனைவரும் ஆழ்ந்துசிந்திப் பார்களாக! ○

பொறுத்தது போதும்!

— தமிழவேந்தன் எழில் —

தமிழினை மீட்பரைத் தளைப்படுத் தினளொரு
தறுதலைச் செயலவளே—எங்கள்
தமிழ்மண்ணிற்(கு) அயலவளே—பெரும்
அமிழ்தினும் இனிய அருந்தமிழ்ப் புலவரை
அறையினுள் பூட்டி வைத்தாள்—தமிழ்
மறையினைச் சிறையில் வைத்தாள்
உமிழ்ந்திடும் சாறியே உலகெலாம் கூடியே
உதவாத பரிசினளே—கண்ணில்
ஊன்றிய கரிசினளே
கவிழ்ந்திடும் விரைவினில் கடலடி நடுவினில்
காரிகையின் ஆணவமே—அவள்
கடுங்கோலின் ஆட்சியுமே!

நெருப்பினை அள்ளியே மடியினில் கட்டிடும்
நிலையினில் தலைமகளாவள்—தமிழ்
நிலத்திலே பழிவிதைத்தாள்
உருப்படி யில்லாச் செயல்களைச் செய்யும்
உதவாக் கறையிவளே—அடா
ஒதிய மரம் இவளே
தெருப்படிப் புல்லாய் இவள்பனை தேடும்
தெருநாய்த் திருடரெல்லாம்—தமிழ்த்
தேசத்தை ஆளுவதோ
நெருப்பென எழுவீர்! நெடும்புகழ்க்காப்பீர்!
நிலத்தினைக் குடைந்திடுவீர்—பகை
நெடுங்குன்றை இடித்திடுவீர்!

அரக்கனின் சிறையுள் அடைபட்டார் தமது
அரும் பெருஞ் சித்திரனார்—தமிழ்
அன்னையின் நன்மகனார்
உரக்கவே முழங்கினார், உண்மையை வழங்கினார்
உலகப் போறிஞரடா!—தமிழ்
உலகத்தின் முதல்வரடா!
மறக்குல வேந்தர்மா ந்தருள் தெய்வம்
மாணிக்க மேதையடா—இவர்
மானத்தின் தாதையடா
பிறப்பதும் ஒருமுறை இறப்பதும் ஒருமுறை
புயலெனக் கிளர்ந்தெழடா—தமிழ்ப்
போர்க்கொடி உயர்த்திடடா

ஆட்சியின் திமிரும் அதிகாரக் கொழுப்பும்
அலறியே ஓலமிட—ஏழு
அண்டங்கள் தாளமிட

அறிவியல் வளர்ச்சிப் போக்கில் தமிழ் எழுத்துகளின் வடிவ மாற்றங்கள்.

—மா. பூங்குன்றன்.

அறிவியல் மிக விரைவாக வளர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் தமிழில் அறிவியல் ஆக்கங்களை வெளிப்படுத்த, தமிழை நுட்ப மொழியாக ஆக்கத் தேவைகளும் மிகுதியாகிக் கொண்டுள்ளன. அத் தேவைகளை நிறைவுசெய்யத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அறிவியலறிஞர்களும், அறிவியல் ஈடுபாடு கொண்ட தமிழறிஞர்களும் உழைப்பைச் செலுத்துதல் வேண்டும்.

ஆனால் இவை முழுமையாக நடைபெறவில்லை. இருப்பினும் இதன் ஒரு பகுதியான, தமிழ்மொழியில் உள்ள எழுத்து வடிவங்களைப் பற்றி கடந்த இருபது ஆண்டுகளாகப் பல்வேறு செயற்பாடுகள்—ஆய்வுகள் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன.

எழுத்துச் சீர்திருத்தம், வடிவச்சேர்ப்புகள் என்பன போன்ற வடிவ மாற்றங்கள் மட்டுமே மொழியை அறிவியல் நுட்ப மொழியாக மாற்றிவிட முடியுமா?

—இது பற்றிய ஒரு தருக்கத்தைத் தொடங்குதல் இனி நாம் என்னென்ன செய்ய வேண்டுவன என்பவற்றைப் பற்றி ஆராய்தலுக்கு வழிகோலும் என்பதால் இதன் வழிச் சில கருத்துகளைத் தொடக்கமாக இக் கட்டுரை தாங்கி வந்துள்ளது;

மேலும், தென்மொழி இதழ் சுவடி 26ஓலை 11-இல் வெளிவந்த கட்டுரையான அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஆசிரியர் அவர்களால் அளிக்கப்பெற்ற கட்டுரை பற்றித் தென்மொழி அன்பர் பலரிடமிருந்து கருத்து மடல்கள் வந்துள்ளன. அக் கட்டுரைக் கருத்துகளைச் சிலர் வரவேற்றும், பலர் மறுத்தும் மடல் எழுதியுள்ளனர். இதுபற்றிய கருத்து அலசல் செய்வது இந்நேரத்தில் நல்லது என்று தோன்றியதாலும் இக்கட்டுரை விளைந்தது. இதையும் ஒட்டி இக் கட்டுரை வந்துள்ளதால் இதை அன்பர்கள் ஊன்றிப் படித்துப் பார்த்துக் கருத்துரைக்குமாறு வேண்டுகிறேன்.

எந்த ஒரு கருத்தும் மாற்றத்திற்கு உட்படக் கூடியதே; ஒரு தெளிவான கருத்தை நோக்கி நாம் செல்ல அதுவே வழியமைக்க முடியும் என்று எண்ணுகிறேன்.

எழுத்து என்பதன் வரையறைபற்றியும் எழுத்துக்கும் மொழிக்கும் உள்ள தொடர்புபற்றியும் இதுவரை நாம் தெரிந்து கொண்டவற்றைப் பார்த்துச் சென்றால் புதிதாக நுழைபவர்களும் புரிந்து கொள்ள ஏதுவாகும்.

நாம் மொழிவதற்கு—ஒலிப்பதற்குக் கொடுக்கும் வரிவடிவம் தான் எழுத்து. எழுத்தே மொழியாகாது; எழுத்து என்பது உண்மையில் ஒலி வடிவமேயாகும். வரிவடிவம் அவ்வொலி வடிவிற்கு ஓர் அடையாளக் குறியீடேயாகும்.

உலகில் உள்ள ஒவ்வொரு மொழியும் தனக்கெனக் குறிப்பிட்ட சில ஒலிப்பு எழுத்துகளையும் அவற்றிற்குரிய வரிவடிவங்களையும் அமைத்துக் கொள்கின்றது.

எழுத்துகள் கல்லில் செதுக்கும்போது ஒரு வடிவமும், ஓலையில் எழுதும்போது ஒருவடிவமும், பெறுகின்றன. தாளில் எழுதும்போது, அச்சுக்கு ஏற்றவாறு என இவ்வாறு படிநிலை வளர்ச்சிக்கேற்பப் பல்வேறு வரிவடிவங்களைப் பெற்று வந்துள்ளன. ஆனால் இத்தகைய வடிவமாற்றமேற்படும்போது மொழியில் புதியனவான எழுத்துகள் தோற்றம் பெறவில்லை.

எனவே, மாந்தன் ஒலிக்கக் கூடிய ஒலிகளில் ஒரு பகுதி ஒலிகளை ஒரு மொழி எடுத்துக் கொண்டு கையாளுகிறது. வேறு மொழி அதே பகுதிகளின் சில கூட்டியோ குறைத்தோ கையாளுகிறது. இவ்வாறு கையாளுவதில் மொழிக்கு மொழி வேறுபாடாகச் சில ஒலிகளைத் தமக்கு சிறப்பொலிகளாக்கிக் கொள்கின்றன.

காட்டாக 'ழ' என்ற ஒலி தமிழில் உள்ளது. ஆங்கிலத்தில் இல்லை. வடமொழிகளில் உள்ள ஷ,ஜ,ஸ போன்ற ஒலிகள் தமிழில் இல்லை.

இப்போது அறிவியல் வளர்ச்சி பெற்ற காலம். அறிவியல் ஆக்கங்களை அனைவரும் பயன்படுத்தும் காலம். இக் காலத்தில் அறிவியலைத் தெரிந்துகொள்ள ஆங்கிலம் பயில வேண்டியுள்ளது. அல்லது ஆங்கிலத்தில் உள்ள செய்திகளைத் தமிழில் ஆக்க வேண்டியுள்ளது. அறிவியலை ஆங்கிலத்தில் பயில்பவர்கள் அதைத் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வதோடு மட்டும் நின்றுவிட்டதாலும். தமிழில் ஆக்கம் செய்கிறவர்கள் குறைந்துவிட்டதாலும், தமிழில் ஆக்கம் செய்யும் மனப்பான்மை வளர்க்கப்படவில்லை.

கல்வியை ஒரு பிரிவினர் பயன்படுத்தி முன்னேறிவிட வேண்டும்; பிறரை ஆளவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களின் ஆளுமை அதிகமாகிவிட்டதால். இந்தியா போன்ற பன்மொழி நாடுகளில் ஒவ்வொரு மொழியிலும் மொழிபெயர்க்கும் நிலை சரியாக உருவாகவில்லை. திட்டமிட்டு ஆளுமைமொழி பிறமொழிகளின் வளர்ச்சியைக் குறைக்கிறது. எனவே போட்டிகளுக்கிடையில் நாம் தமிழை வளர்க்கவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறோம். மொழி தாழ்ந்தால் இனம் தாழும்.

தமிழில் அறிவியலைக் கற்கும் அளவிற்குத் தமிழை அறிவியல் நுட்ப மொழியாக மாற்றவேண்டும்—என்ற எண்ணம் கொண்டவர்கள் மிகுதியாக உருவாகவில்லை. அவ்வாறு அக்கறை கொண்ட-

வர்கள் சிலருக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காததுமில்லாமல்—ஊக்கம் கொடுக்காததுமில்லாமல் அவர்கள் ஏளனத்திற்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்தியில் உருவாக்கும் நிலையை அங்கு மெச்சுகின்ற உணர்வு வளர்ந்துள்ளது. தமிழில் உருவாக்கும்போது அரசும் கண்டு கொள்வதில்லை.

அறிவியல் வளர்ச்சி, தமிழ் ஆக்கம் இவையிரண்டும் இணையான வளர்ச்சியில் வளரவில்லையாயினும் நீண்ட இடைவெளியில்லாமல் வளர்ந்தால்தான் ஒரு காலகட்டத்தில் அறிவியல் வளர்ச்சியை நாம் எட்டிப் பிடிக்க இயலும்; இல்லையெனில் நாம் இன்னொருவரை—இன்னொரு இனத்தை—மொழியை நம்பி வாழும் இனமாகவே இருந்து போவோம்.

இப்போது அறிவியல் வளர்ச்சியைப் பொறுத்தவரை தமிழில் பயிலவேண்டும் அல்லது தமிழை மீறி ஆங்கிலத்தில் பயில வேண்டும். நம்மைப் பொறுத்தவரை நமக்குத் தமிழ் உணர்வு உண்டு. தமிழில் ஆக்கம் செய்வதை வரவேற்கும் குணம் உண்டு. தமிழிலுள்ள மெலிவுகள் எவையெனக் கண்டு அதை வலுவாக்கும் திறனுள்ளவர்களாக இருப்பினும் செயலற்றவர்களாக உள்ளோம். தமிழால் எதுவும் முடியும் என்ற எண்ணம் நமக்குண்டு. ஆனால் நாம் வாளாயிருந்து தமிழ் எவ்வாறு அறிவியல் நுட்ப மொழியாக மாறமுடியும். நிரம்ப முயற்சிகள் தேவைப்படுகின்றனவே.

அவ்வாறில்லாமல் ஆங்கில வேட்கையை ஒழித்துவிட முடியாது; தமிழ் வளர்ச்சித் தானாகவும் வந்துவிட முடியாது.

தனித்தமிழ் என்ற கொள்கையே பிறமொழிக் கலப்பினால் தமிழ் கெடும் நிலையைத் தவிர்ப்பதற்குத்தான். அதே நேரத்தில் தனித்தமிழ் என்று கருதாத நிலையில் கொஞ்சம் தளர்த்தும்போது கூட அறிவியல் வளர்ச்சி என்று ஒரு நிலையும் கருத்து வளர்ச்சி மேம்பாடுகளும் ஏற்பட வாய்ப்புள்ளது. அந்த வாய்ப்புகள் தனித்தமிழிலேயே கிடைக்கப் பாடுபட்டால்தானே தமிழ் தனித்தே வளரமுடியும்.

எனவே பிறமொழிக் கலப்பின் தேவையே கருத்து வளர்ச்சியை—அறிவியல் வளர்ச்சியையொட்டித்தான் வருகிறது; அறிவியல் வளர்ச்சிக்குத்தக மொழியை வளர்ச்சி நிலைக்குக் கொண்டு போகாதபோது யார்தான் அம்மொழியில் அறிவியலை வருந்திக் கற்க முன் வருவர்!

அடுத்து, நாம் பார்த்ததே எழுத்துகளுக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு. எழுத்து என்பதே மொழியாகாது. எனினும் மொழி தனக்குள் அடங்கிய எழுத்துகளின் எல்லைகளை மீறிச் செல்வதில்லை. எழுத்து எண்ணிக்கையிலும், ஒலிப்பு முறையிலும் கூட மொழி தன் தனித் தன்மையைப் பேணுகிறது.

காட்டாக, ஜ,ஷ,ஹ, போன்ற வட வெழுத்துகள் தமிழுக்கு மிகவும் புறம்பானவை. ஆனால் இந்த எழுத்துகளை வைத்துத் தமிழ்ச்சொல், அயற்சொல் என்பவற்றைப் பிரித்தறிய இயலாது. இவ் வெழுத்துகள் தவிர்த்து தமிழுக்குரிய எழுத்துகளிலேயே பிறமொழிச் சொற்கள் வரலாம். பிறமொழி எழுத்துகள் விரவி தமிழ்ச் சொற்களிலும் மாறி வழங்கலாம்.

(எ.கா) தகராறு (உருது)
கார் (ஆங்கிலம்)

இவை தமிழாகாதது போலவே வெட்டிய துணியான வேட்டியை

வேட்டி — வேஷ்டி என வழங்கினாலும் கூட இது போன்ற சொற்கள் வடமொழி எழுத்துகளைக் கொண்டிருந்தலால் தமிழ் அல்லாதவை என்றாகி விடா.

ஆனல், பிறசொற்கள் தமிழில் விரவியபின் அடையாளம் கண்டுபிடிப்பதற்கு உதவும் முதற்கருவி எழுத்துதான்.

ஒரு மொழியிலிருந்து கலைச் சொற்களை மற்றொரு மொழிக்குக் கொண்டு செல்லும்போது பொதுவாக மூன்று முறைகளில் உலகில் நடைமுறைப் படுத்தப் படுகிறது.

1. மொழியாக்கம்.
2. மொழிபெயர்ப்பு
3. ஒலிபெயர்ப்பு.

இம் மூன்றுமே தரத்திலும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் மிகவும் எளிமையானது ஒலிபெயர்ப்பு. ஆனால் அதிலும் கூட மொழி மரபு பின்பற்றப்படுகிறது.

ஆங்கிலத்தில் உள்ள ரேடியோ உருசியத்துக்குச் செல்லும் போது 'ராஜியோ' என்று வழங்கப்படுகிறது. இதுபோல் ஐரோப்பிய நெருங்கிய நாடுகளும் தங்கள் அண்டை நாட்டு மொழிக் கலைச்சொற்களை அப்படியே ஒலித்துவிடுவதில்லை, தங்கள் மொழி மரபுக்குத்தக மாற்றிவிடுவதுதான் இயல்பு.

இது ரகர, லகரம்- மொழிக்கு முதலில் வரக்கூடாது என்று நாம் 'இ' அல்லது 'அ' சேர்த்து வழங்குவது போன்றதே.

உருசிய மொழி எழுத்தாளரான 'லேவ் தல்ஸ்தோ, என்ற அறிஞரை ஆங்கில உலகம் 'லியோ டால்ஸ்டாய், என்றுதான் அறிமுகம் செய்கிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது சில உண்மைகள் நமக்குப் புலனாகின்றன.

ஒலிபெயர்ப்புச் செய்யும்போது வாங்கிக்கொள்ளும் மொழிகள் மொழி மரபை விட்டுவிடத் தேவையில்லை.

தனிச் சிறப்புப் பெயர்கள் (Propernown) தாம் இம்மொழி மாற்றலுக்கு உட்படுகின்றன; கலைச் சொற்கள் மொழி பெயர்ப்புக்குரியன;

இந் நோக்கிலேயே தென்மொழி கருத்துரையை நோக்கு-வோமானால்,

ஒலி பெயர்ப்புச் செய்யும்போது தமிழ் மரபுக்கு மாறான ஜ,ஷ,ஹ,ஸ போன்ற எழுத்துகளைக் கலப்பது தேவையா என்பது மிகவும் எண்ணிப்பார்க்கக் கூடியதாகிறது.

மொழி பெயர்ப்புக்குச் சோம்பியவர்கள் ஒலி பெயர்ப்புக்குச் சென்று விடுவர். அதுவே நடைமுறையில் பயின்றுவிடும். பிறகு மாற்றுவதற்கு அரிதாகிவிடும். எனவே மொழி வளர்ச்சி மீண்டும் தேக்க நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

ஜ,ஷ,ஹ,ஸ போன்ற எழுத்துகள் கலந்தாலே இச்சொல் தமிழில்லை என்ற முதல் வடிப்பான் உணர்வு பயனற்றுப் போய் விடும். எனவே எது அயல்மொழி என்றறிவதில் ஏற்கனவே உள்ளதைவிடக் குழப்பங்கள் மிகும்.

இவ்வைந்து எழுத்துகளிலேயே மிகவும் கெடுதலானது க்ஷ இந்த எழுத்தே தமிழ்—வட கூட்டெழுத்து 'க—ஷ' என்ற இரண்டின் கூட்டெழுத்து. பிறமொழி கலப்பினும் பிறமொழி எழுத்துக் கலப்பு கொடுமையானது.

ஜ,ஷ,ஹ,ஸ போன்ற எழுத்துகளுக்கு மாற்றெழுத்து போட்-டெழுதும் மரபு அழிந்துவிடும்; தமிழுக்கென உள்ள மரபுகளில் ஒன்று அழிந்துபடும். நாளை இன்னொரு மொழியில் உள்ள வேறு சிறப்பெழுத்து தமிழில்இல்லையெனக் குறையேற்படலாம்.(ஆங்கி-லத்தில் உள்ள 'F' போன்ற எழுத்துகள்) இவ்வாறு தொடர்ந்து கொண்டே போகும். உலகில் வேறெந்த மொழியும் இவ்வாறு செய்து கொள்வதில்லை.

இந்தியில் 'F' கிடையாது என்பது பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை.

இஃது இப்படியிருக்கப் பிற மொழி எழுத்துகளை எடுத்துக் கொள்ளவேண்டிய தேவை என்ன என்று பார்ப்போமானால்,

அறிவியல் பொதுக் கலைச் சொற்கள் (Universal terms) என்று உலக முழுமைக்கான பொதுக் கலைச் சொற்கள் என சில சொற்கள் நிலவுகின்றன.(அவைகூடத் தொழில் நுட்பம் வளர்ந்த சப்பான் போன்ற நாடுகளிலும், உலகின் மிகப் பெரிய மொழி-யான சீனத்திலும் மொழிபெயர்க்கப்பட்டே வழங்கப்படுகிறது; சப்பான் என்ற சொல்லேகூட ஆங்கிலத்தில் மட்டும் தான் Japan என்று வழங்குகிறது; சப்பான் மொழியில் 'நிப்போன்' என்று தான் அந்நாட்டின் பெயரைக் கூறுகின்றனர்) அச் சொற்களை அப்படியே ஒலிபெயர்ப்பு செய்யத் தேவையுள்ளது. அவ்வாறு ஒலிபெயர்ப்புச் செய்யும்போது ஜ,ஷ,ஹ,ஸ தேவையாக இருக்-கிறது.எடுத்துகாட்டு: ஆக்ஸிஜன், நைட்டிரஜன்;

அடுத்து தனிச் சிறப்புப் பெயர்கள்(Proper Names)தமிழில் வழங்க இயலாமை ஒரு குறையாக உள்ளது. எனவே, இருக்கிற தமிழ் எழுத்து வடிவங்களைக் கொண்டு அவ்வொலிகளை உருவாக்கம் செய்யஇயலுமா என்று எண்ணலாம்.

அடுத்து தமிழ்—அயற்சொல் பகுப்புணர்வு பல தமிழர்களிடை ஏற்படவில்லை. பூ, மலர் ஆகிய சொற்கள் இருக்க புஷ்பம் என்ற சொல் வடமொழி என்று விளங்கிய நிலையில் 'புட்பம்' என்ற சொல்லும் தமிழ்ச் சொல்லாகி விட்டதாக உணர்வர்.

தனிச் சிறப்புப் பெயர்கள் (Proper Names) ஊர்ப் பெயர்களும், மாந்தப் பெயர்களும், மட்டும்தான்.

இதுபற்றி நாம் இப்போது ஒருங்கிணைந்து முடிவெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இப்போது ஜ,ஷ,ஸ மூன்றெழுத்துகளுக்கும் 'ச' என்ற ஒரே எழுத்தைத்தான் மாற்றெழுத்தாகப் பயன்படுத்துகிறோம். 'ஹ' என்ற எழுத்திற்கு 'அ,க' இரண்டெழுத்துகளை இடத்திற்குத்தக மாற்றெழுத்துகளாக பயன்படுத்துகிறோம்.

இது தொடர்பாக அன்பர்களின் கருத்துகளை வைத்து ஒரு முடிவுக்கு வருவதுதான் நலம். எனவே அன்பர்களில் அறிவியல் ஈடுபாடு கொண்ட தமிழறிஞர்களும் தமிழ்ப் பற்று கொண்ட அறிவியலறிஞர்களும், ஆசிரியர்களும் தவறாது தங்கள் கருத்தினை விளக்கமாகவும் அதே நேரத்தில் சுருக்கமாகவும் தெரிவிக்க வேண்டுகிறோம். தங்களின் கருத்தின் சுருக்கமும் முடிவும் எதிர்வரும் இதழ்களில் வெளிவரும். ○

பாவலரேறு ஐயா அவர்கள்
சூலை —7— வழக்குமன்றம் வருகிறார்கள்!

"தடா எனும் கொடுஞ் சட்டத்தில் கடந்த 27-1-93 அன்று நம் ஐயா பாவலரேறு அவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருப்பதை அன்பர்கள் அறிவார்கள். ஐயா பாவலரேறு அவர்கள் வரும் சூலை 7-ஆம் நாள் சென்னை உயர் வழக்குமன்ற (High Court) வளாகத்திற்குள் உள்ள சிறப்பு வழக்கு மன்றத்திற்கு காலை 10-30 மணிக்கு அழைத்து வரப் பெற உள்ளார்கள். தென்மொழி அன்பர்களும், ஆர்வலர்களும் அங்குக் கூடுவது ஐயா அவர்களைக் காண வாய்ப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—அமைச்சர்.

போற்றுதே அடிமை வாழ்வை!

—பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு.

தன்காலில் தான்நிற்கவேண்டும்—தமிழன்
தன்மானத் தோடுலகில் யாண்டும்!
பொன்னோடு பொருள் அள்ளித் தரினும்
போற்று(து) அடிமைவாழ்வை மீண்டு!

குன்றாதே குறுகாதே தமிழா!—அன்று
கொடிகட்டி உலகாண்டார் நம்மோர்!
வென்றெடுப்பாய் உன் நாட்டை நீயும்
விடுதலைச்சூள் உரைத்துப் புகழ்கொண்டு!

உன் நாடு தமிழ்நாடு போற்று!—தமிழா!
உறங்காமல் விழித்துரிமை சாற்று!
முன்பிந்த உலகாண்டார் வென்றே
மொய்ம்பினைக் காட்டி நம்மவர் நன்றே!

இன்றரசாள்வோர் கொடுமை கண்டாய்! நீ
ஏனிந்தத் தாழ்வேற்றுக் கொண்டாய்?
பொன்று(து) உணர்வெழுந்தே ஆர்ப்பாய்!
பொன்னாட்டை மீட்டுப்புகழ் சேர்ப்பாய்!

சோற்றுப் பிண்டமாய் இருக்காதே!

தின்னச் சோறு கிடைத்தால் போதும்
தெருநாய் எனவே திரிவான்!—தமிழன்
தன்னைமறந்து தன்புகழ் சிதைத்துத்
தழும்பேறி அடிமை புரிவான்!

என்ற இழிவை நீக்குவ தென்றோ?
இனம், மொழி, நாட்டை மீட்டுத்—தமிழன்
வென்று நிமிர்வ தென்றோ என்றோ?
விடுதலைச் சூளுரைத் தெழுந்து!

பொன்னை நெருப்பில் போட்டே உருக்கினும்
பொலிவு குன்று(து) அதுபோல்—தமிழா!
உன்னைச் சிறையில் தள்ளி வதைக்கினும்
உறுதிதளரா மல்நீ,

முன்வைத்த காலைப் பின்வைக் காமல்
மொய்ம்பினைக் காட்டி நின்று—வென்று
தென்னு! தமிழா! தீரம் விளைத்துநீ
தீந்தமிழ் நாட்டை மீட்பாய்!

அற மன்றங்கள் அல்ல! வழக்கு மன்றங்களே!

Court—களை அற மன்றங்கள், நெறி மன்றங்கள் என்று தமிழில் மொழிபெயர்க்கின்றோம். அவை அறச்சாலைகளோ, நெறிமுறை மன்றுகளோ அல்ல. வெறும் வழக்கிடு மன்றங்களே! அரசு அமைத்துக் கொடுக்கும், ஒழுங்குக்கும் வகுத்துக் கொடுக்கும் சட்டங்களுக்கும் ஏற்பவே அவை செயல்புரிய முடியும். பின்னர் வகுக்கும் சட்டங்கள் முன்னர் வகுத்துக்கொண்ட சட்டங்களுக்கு முரண்படாமல் இருப்பதை அவ்வழக்கு மன்றங்கள் கண்டு காட்டிச் சொல்லுகின்றன அவ்வளவுதான்.

அரசவையை ஒரு மருத்துவனுக்கு ஒப்பிட்டால், வழக்கு மன்றங்களை ஒரு மருந்து கொடுப்போனுக்கு ஒப்பிடலாம். நோயாளிகளே மக்கள்! என்ன நோயாளிக்கு என்ன மருந்து கொடுக்கப்படவேண்டும் என்பதை மருத்துவர் எழுதிக் கொடுப்பார்; அதன்படி மருந்து கொடுப்போன் கலக்கிக் கொடுப்பான். மருத்துவர் எழுதிக் கொடுத்த நோயையோ, மருந்தையோ, ஆய்வதற்கோ அவற்றைத் தவறு என்று சொல்வதற்கோ அவனுக்கு அதிகாரமில்லை. அது மருத்துவர் வேலை. அவனுக்கு மருத்துவர் கூற்றுப்படி நோயாளியிடம் மருந்தைக் கொடுத்துப் போகச் செய்வதே! வேண்டுமானால் அம்மருந்தை உண்ணும் முறைகளைச் சொல்லி நோயாளிகளை எச்சரித்து அனுப்பலாம்!

இப்பொழுது சொல்லுங்கள்; வழக்கு மன்றங்களுக்கும் மருந்து கொடுப்போனுக்கும் ஏதேனும் வேறுபாடுகள் உள்ளனவா என்று; எனவே, அமைத்துக் கொடுக்கும் சட்டத்தின்படி செயற்படும் அதிகாரத்தை மட்டும் கொண்டுள்ள வழக்கு மன்றங்கள் அற-மன்றங்கள் ஆகவே ஆகா! —பெசின்.

வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழ், தமிழினம் மேம்பட தம் வாழ்நாளெல்லாம் அதற்காகவே உழைத்துவரும் தென்மொழி, 'தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனாரை 'தடா' சட்டத்தில் சிறைப்படுத்தியதை வன்மையாகக் கண்டிக்கிறோம். தோழர்கள் பழ. நெடுமாறன், பொழிலன் போன்றோரை விடுவித்த பின்பும், தமிழறிஞர் பாவலரேறு பெருஞ்சித்திரனாரை மட்டும் இன்னும் தடாவில் வைத்திருப்பது வேண்டுமென்றே தமிழக அரசு அவரைப் பழி வாங்கும் எண்ணத்தில் சிறைப்படுத்தியதாகவே தெரிகின்றது!

இந் நாட்டில் தமிழன் உரிமைகளைப் பேசுவதற்கே தடா சட்டம் என்றால் தமிழனே... தமிழ்நாடே ''தடா''வில் உள்ளது என்பதை என்றுதான் உணருவாயோ?

—நன்றி: 'அன்றில்' (சன-பிப் '93)